**பாடம் 2** **ஜனவரி 6-12**



# ஜெபிக்கக் கற்றுத்தாரும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** சங் 105:5; கொலோ 3:16; யாக்கோபு 5:13; சங்கீதம் 44; சங்கீதம் 22; சங்கீதம் 13; சங். 60:1–5.

**மனன வசனம்:** அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான். லூக்கா 11:1.

**இவ்வாரக் கண்ணோட்டம்:**

ஜெபம்பண்ண கற்றுக்கொள்ளக்கூடாது, அது தானாக வரவேண்டும், அதுதான் உண்மையான ஜெபம் என்கிற நம்பிக்கை பல கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுகிறது. ஆனாலும், இயேசுவிடம் சீடர்கள் தங்களுக்கு ஜெபிக்கப் போதிக்கும்படி கேட்டபோது, அதிக வளமான அனுபவத்தைப் பெற்றார்கள். தேவன் ஜெபப்புத்தகமான சங்கீதங்களை, வேதாகமத்தின் மையத்தில் வைத்திருக்கிறார்; அது முற்கால மக்கள் எவ்வாறு ஜெபித்தார்கள் என்று காட்டுவதற்காக மட்டுமல்ல, இன்று நாம் எவ்வாறு ஜெபிக்கலாம் என்று கற்றுக்கொடுப்பதற்காகவும் இருக்கிறது.

ஆரம்பக் காலங்கள் முதலே, இயேசுவின் ஜெபங்கள் உட்பட தேவமக்களின் ஜெபங்களில் சங்கீதங்கள் இடம்பெற்றிருக்கின்றன. 1நாளா 16:7, 9; நெகே 12:8; மத் 27:46; எபே 5:19. தேவமக்கள் தங்கள் வாழ்க்கையைக் கடந்துசெல்லவும், தேவனோடான உறவில் வளரவும் சங்கீதங்கள் எவ்வாறு உதவின என்று இந்தவாரம்பார்ப்போம்.சங்கீதங்கள்ஜெபங்களாகும்;அவைமதிப்புவாய்ந்தவை; அவற்றில் இறையியல் நுண்கருத்துகள் உள்ளன; அதுமட்டுமல்ல, நம் தனிப்பட்ட, சபை அளவிலான ஜெபங்களை வளப்படுத்தி, மாற்ற வல்லவை.

சங்கீதங்களைச் சொல்லி ஜெபித்து, அநேகர் தங்கள் ஜெபவாழ்க்கையைக் கட்டி, பராமரித்து, அதில் திருப்தியடைந்திருக்கிறார்கள்.

இக்கட்டான சூழ்நிலைகள் நிறைந்த இக்காலத்திற்கு சங்கீதங்கள் எவ்வாறு உதவக்கூடும் என்று இந்த வாரம் பார்ப்போம்.

***2024 ஜனவரி 13 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# ஜெபத்தில் சங்கீதங்களைப் பயன்படுத்துதல்

**விசுவாசியின் தொழுகை அனுபவத்தில் சங்கீதங்களின் பங்கு என்ன? சங்கீதம் 105:5, கொலோசெயர் 3:16; யாக்கோபு 5:13.**

அன்றாட வாழ்க்கையில் சங்கீதங்களை அறிமுகப்படுத்த எளிய வழி தினமும் ஒரு சங்கீதம் வாசிப்பதாகும். சங்கீதம் 1இலிருந்து ஆரம்பித்து, தொடர்ந்து வாசியுங்கள். இன்னொருவழி, உங்களுடைய சூழ்நிலைக்கேற்ற சங்கீதத்தை வாசிப்பது. தனிப்பட்ட புலம்பல் சங்கீதங்கள், சபை அளவிலான புலம்பல் சங்கீதங்கள், ஸ்தோத்திர சங்கீதங்கள், துதிப்பாடல்கள், மனவருத்த சங்கீதங்கள், ஞானப்பாட்டுகள் (தேவ ஞானம், வழிகாட்டலுக்கானவை), வரலாற்று சங்கீதங்கள், கோபமும் மூர்க்கமும் கலந்த சங்கீதங்கள், புனிதப்பயண சங்கீதங்கள் போன்றவை உள்ளன. இந்தக் காலாண்டில் இவற்றில் பலவற்றை, அவற்றின் பின்னணியில் ஆராய்வோம்.

**அப்படியானால், சங்கீதங்களை எவ்வாறு வாசிக்கவேண்டும்?**

முதலில், சங்கீதத்தை வாசித்து, தியானித்து, ஜெபியுங்கள். சங்கீதத்தை அசைபோடுவதில் அதன் பல்வேறு அம்சங்களைத் தியானிப்பது அடங்கும். உதாரணமாக, சங்கீதக்காரன் தேவனைக் குறிப்பிடுகிற விதம், ஜெபத்திற்கான காரணங்கள் போன்றவை. உங்கள் சூழ்நிலைக்கும் சங்கீதக்காரனுடைய அனுபவத்திற்கும் இடையேயான தொடர்பையும், உங்கள் அனுபவத்தை வெளிப்படுத்த சங்கீதம் எவ்வாறு உதவக்கூடும் என்பதையும் பாருங்கள். சங்கீத்த்தில் நீங்கள்வாசிக்கிற விஷயங்களோடு உங்களை நீங்கள் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும் என்பது ஆச்சரியமானது.

சங்கீதங்களில் சவாலான பகுதிகள் இருந்தால், தவறான நம்பிக்கை எதையாவது திருத்த வேண்டியுள்ளதா என்று யோசியுங்கள். கிறிஸ்து, அவரது இரட்சிப்பு பணி, அவரது பணியால் கிடைத்துள்ள நீண்டகால நம்பிக்கை ஆகியவற்றின் பின்னணியில் சங்கீதத்தின் செய்தியைத் தியானியுங்கள். வேதாகமத்தின் எந்தப் பகுதியாக இருந்தாலும், கிறிஸ்து மற்றும் சிலுவையின் வெளிச்சத்தில் அதைப் பார்ப்பதே நல்லது.

மேலும், வேறு என்ன நோக்கங்களுக்காக ஜெபிக்கலாம், உங்களுக்கும் உங்கள் சபைக்கும் உலகத்திற்கும் அதிலுள்ள முக்கியத்துவம் என்ன என்று சங்கீதங்களிலிருந்து அறியலாம். தேவன் தம் வார்த்தையை உங்கள் இருதயத்திலும் மனதிலும் வைக்கும்படி கேளுங்கள். யாராவது ஒருவருடைய சூழ்நிலையோடு சங்கீதம் தொடர்புடையதாகஇருந்தால், அவருக்காக ஜெபத்தில் வேண்டிக்கொள்ளுங்கள். வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களுக்கு சங்கீதம் பொருந்துகிறது; அவற்றை வாசிப்பதாலும், அவற்றின் செய்தியைத் தியானிப்பதாலும் நாம் வளம்பெறலாம்.

---

**'கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே பரிபூரணமாக வாசமாயிருப்பதாக' என்பதின் அர்த்தம் என்ன? கொலோ 3:16. வேதாகமத்தை வாசிப்பது ஏன் அந்த அனுபவத்திற்கு முதற்கண் முக்கிய முயற்சியாக இருக்கிறது?**

# இக்கட்டுக் காலத்தில் நம்பிக்கை

விரக்தியும் பாடுகளுமான அனுபவம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும்; அப்போது தேவன் என்ன செய்கிறார் அல்லது ஏன் இதை தங்களுக்கு அனுமதிக்கிறார் என்று யோசித்திருப்பார்கள். இதே அனுபவங்களை சங்கீதக்காரங்களும் அனுபவித்திருக்கிறார்கள். தங்கள் அனுபவத்தை ஆவியின் ஏவுதலால் பதிவு செய்தார்கள்.

**சங்கீதம் 44 சொல்லுவது என்ன? அது ஏன் எல்லாக் காலங்களிலும் உள்ள விசுவாசிகளுக்கு பொருத்தமானதாக இருக்கிறது?**

சபை ஆராதனைகளில் வாசிக்க தேர்வுசெய்கிற சங்கீதங்கள், சபையில் நாம் என்ன மனநிலையோடு, என்ன வார்த்தைகளால் ஜெபிக்கிறோம் என்பதை வெளிப்படுத்துகிறது. வாழ்க்கையின் இருண்ட அனுபவங்களை எதிர்கொள்ள நம்மால் இயலாமலும் அல்லது சௌகரியமாக இல்லாமலும் இருப்பதால், அவ்வாறு செய்கிறோம். பாடுகள் நம்மைத் தாக்கும்போது தேவன் நம்மை அநியாயமாக நடத்துவதாக சிலசமயங்களில் யோசிக்கிறோம்; நம் எண்ணங்களை பொது ஆராதனையில் அல்லது தனிப்பட்ட ஜெபத்தில் வெளிப்படுத்துவது பொருத்தமாக இராது என்று கருதுகிறோம்.

இந்தத் தயக்கம் தொழுகையின் முக்கியப் பொருளை மறக்கச்செய்கிறது. ஜெபத்தில் நம் உணர்வுகளையும் கருத்துகளையும் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் வெளிப்படுத்த தவறுவது, நம் உணர்வுகளுக்கே நம்மை அடிமையாக்கிவிடுகிறது. அது, தேவனை அணுகிச் செல்வதற்கான நம்பிக்கையைக் கெடுத்து விடுகிறது. ஆனால் சங்கீதங்களைச் சொல்லி ஜெபிக்கும்போது, நம் அனுபவத்தை கத்திரித்தோ மறுத்தோ பேசவேண்டியதில்லை.

உதாரணமாக சங்கீதம் 44, தவறே செய்யாமல் பாடுகள் ஏற்படும்போது அதை சுதந்தரமாக, போதுமான அளவுக்குச் சொல்லி ஜெபிக்க உதவுகிறது. ஜெபத்தில் பேச்சு சுதந்தரத்தை அனுபவிக்க சங்கீதங்கள் உதவுகின்றன. பேச வார்த்தைகள் கிடைக்காதபோது அல்லது பேசத் துணிவில்லாதபோது, சங்கீதங்கள் வார்த்தைகளைக் கொடுக்கின்றன. சங் 44:18,19.

சங்கீதம் 44 துவங்குகிற விதத்தைக் கவனியுங்கள். கடந்தகாலத்தில் தேவன் தம் மக்களுக்காக பெரிய காரியங்களைச் செய்ததாக எழுதுகிறார். அதனால் தேவனை நம்புகிறேன், ‘என் வில்லை நம்பேன்’ என்கிறார். சங் 44:6.

இதன் மத்தியிலும், தேவ மக்களுக்கு இக்கட்டு நேரிடலாம். வேதனையையும் புலம்பலையும் பட்டியலிட்டால் அது நீண்டுகொண்டே போகும்; வேதனையாக இருக்கும். இவற்றின் மத்தியிலும், ‘உம்முடைய கிருபையினிமித்தம் எங்களை மீட்டுவிடும்’ என்று சங்கீதக்காரன் தேவனைநோக்கிக் கதறுகிறார். சங் 44:26. அதாவது இவற்றின் மத்தியிலும், தேவன் இருப்பதையும் அவரது அன்பையும் நம்புகிறார்.

---

**தேவபிரசன்னத்தை நிஜமாக உணரமுடிந்த கடந்த கால அனுபவங்களை நினைத்துப் பார்ப்பது, தேவன் தூரமாக இருப்பது போன்ற சமயங்களில் அவரை நம்புவதற்கு எவ்வாறு உதவுகிறது?**

# விரக்தியின் சங்கீதம்

சங்கீதங்களைச் சொல்லி ஜெபிப்பது சுதந்திரமாக ஜெபிப்பதற்குமட்டும் உதவுவதில்லை. தேவனுடைய தரங்களின்படி அவர்களுடைய அனுபவத்தைச் சோதித்து, தேவ பிரசன்னம் குறித்த மறுநிச்சயத்தையும் நம்பிக்கையையும் கொடுத்து அதைத் தாங்குவதற்கான பெலனைக் கொடுக்கிறது.

**மிகுந்த பாடுகளின் மத்தியில் தேவனில் நம்பிக்கையாக இருப்பது பற்றி சங்கீதம் 22 இலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?**

---

---

பாடுகளில் உள்ளோர் தங்கள் தனிமை உணர்வையும் துக்கத்தையும் தாராளமாகத் தெரிவிப்பதற்கு சங்கீதம் 22:1இன் புலம்பல் உதவுகிறது: 'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?'

இயேசு சிலுவையில் தொங்கியபோது இதே வார்த்தைகளைச் சொன்னதால், கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பரிச்சயமான வார்த்தைகள்; கிறிஸ்துவின் அனுபவத்தில் சங்கீதங்கள் முக்கியப் பங்காற்றினதைக் காட்டுகின்றன.

ஆனாலும் மிகுந்த பாடுகள், உபத்திரவங்கள் மத்தியிலும், 'உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்' என்றும் சொல்லப்படுகிறது. சங் 22:22.

அதாவது, சங்கீதத்தின் ஆசிரியர் இக்கட்டான நிலையில் இருந்தாலும், தேவனில் தன் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார்; என்னவானாலும் தேவனைத் துதிப்பதாகச் சொல்லுகிறார்.

எனவே நாம் நம் தற்போதைய சூழ்நிலைகளைத் தாண்டி, விசுவாசத்தால், தேவ கிருபை நம்மைப் புதுப்பிக்கப்போகிற சமயத்தைப் பார்க்குமாறு சங்கீதங்கள் நமக்குப் போதிக்கின்றன.

சங்கீதங்களைச் சொல்லி ஜெபிப்பது விசுவாசிகளை புதிய நிலைகளுக்கு அழைத்துச் செல்லுகிறது. விசுவாசிகள் தங்கள் உணர்வுகளையும் புரிதல்களையும் வெளிப்படுத்த சங்கீதங்கள் அனுமதித்தாலும், அந்த நிலையிலேயே அவர்களை இருக்க விடவில்லை. அவர்கள் தங்கள் வேதனை, ஏமாற்றம், கோபம், விரக்தி போன்ற பாரங்களை தேவனுக்கு முன் இறக்கிவைத்து, எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் அவரை நம்ப விசுவாசிகளை வழிநடத்துகின்றன.

பல சங்கீதங்களில் கவனிக்க முடிவதுபோல, புலம்பலை நிறுத்திவிட்டு, துதிக்க ஆரம்பிப்பது விசுவாசிகள் தேவகிருபையையும் ஆறுதலையும் பெறும்போது அவர்களில் நடக்கிற ஆவிக்குரிய மாற்றத்தைக் காட்டுகிறது.

---

**நம்முடைய சோதனைகளையும் தாண்டிப் பார்க்கவும், எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் தேவனுடைய தயவில் நம்பிக்கை வைக்கவும் என்ன செய்யலாம்?**

---

# விரக்தியிலிருந்து நம்பிக்கைக்கு

தேவபிரசன்னம் வெகுதூரத்தில் இருப்பது போன்ற அனுபவம் எல்லாருக்கும் ஏற்பட்டிருக்கும். ‘எப்படி இது நடந்தது’ என்று யோசித்திருப்போம்.

நம்மைப் போல சங்கீதக்காரர்களும் இவற்றைச் சந்தித்திருக்கிறார்கள். சில சமயங்களில் நம் பாவங்களால் நமக்கு சோதனைகள் ஏற்பட்டிருக்கும்; ஆனால் மற்ற நேரங்களில் அநியாயமாக நமக்கு உபத்திரவம் உண்டாவதாக நினைக்கலாம். இதுபோன்ற அனுபவம் யாருக்குத்தான் ஏற்படாமல் இருந்ததில்லை?

**சங்கீதம் 13இல், முக்கியமாக என்ன இரண்டு மனநிலைகளைக் காணலாம்? சங்கீதக்காரனுடைய கண்ணோட்டத்தில் முழு மாற்றத்தைக் கொண்டுவந்த தீர்மானம் என்ன?**

---

**‘கர்த்தாவே, எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர், எதுவரைக்கும் உம் முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்?’. சங் 13:1. இது தவறான பார்வை. தேவன் நம்மில் யாரையாவது மறப்பாரா? ஆனாலும், இதுபோன்ற அனுபவம் யாருக்குத்தான் ஏற்படவில்லை?**

எனவே, நாம் பொதுவாகச் செய்கிற ஒரு தவறைச் செய்யாமல் இருக்க சங்கீதம் 13 வழிசொல்லுகிறது. அதாவது, ஜெபிக்கும்போது நம்மையும் நம் பிரச்சனைகளையும் முக்கியப் படுத்த வேண்டாம் என்கிறது. தேவன் தம் மக்களை உண்மையுள்ளவராக, மாறாத தன்மையுள்ளவராக அணுகுவதை உணரும்படி நம் ஜெபங்கள் இருக்க இந்தச் சங்கீதம் உதவுகிறது.

புலம்பலோடும் குறைசொல்லுதலோடும் இந்தச் சங்கீதம் ஆரம்பித்தாலும், இறுதியில் அப்படி முடியவில்லை. அதுதான் முக்கியம்.

நம்முடைய பயமும் பதற்றமும் (சங் 13:1-4) படிப்படியாக மாறி, தேவனுடைய இரட்சிப்பை எண்ணிப்பார்க்கவும், நம் அனுபவம் புலம்பலிலிருந்து துதியாகவும், விரக்தியிலிருந்து நம்பிக்கையாகவும் மாறவும் (சங் 13:5,6) தேவனுடைய மீட்பின் வல்லமையில் நம்பிக்கை வைக்கத் தீர்மானிக்கும்படி இந்தச் சங்கீதம் வழிநடத்துகிறது. சங் 13:5.

சங்கீதங்களுடைய வார்த்தைகளின் அர்த்தம் புரியாமல், அவற்றை திரும்பத் திரும்பச் சொல்லுவதால், மெய்யான மாற்றம் உண்டாகாது. சங்கீதங்களைச் சொல்லி ஜெபிக்கும்போது, சங்கீதம் சொல்லுகிறபடி நாம் செயல்பட பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பெலப்படுத்துவதற்கு முயலவேண்டும். சங்கீதங்களில் தகவல்கள் மட்டுமல்ல, விசுவாசிகளின் குணங்களையும் செயல்களையும் மாற்றுகிற வார்த்தைகள் உள்ளன. அதாவது, தேவ வார்த்தையானது தேவ சித்தப்படி நம்மை மாற்றவும், கிறிஸ்துவோடு நம்மை இணைக்கவும் அனுமதிக்கிறோம். அவர் தேவ சித்தத்தை பரிபூரணமாக எடுத்துக் காட்டினார்; மனிதனாக வந்த தேவ குமாரனாக சங்கீதங்களைச் சொல்லி ஜெபித்தார்.

---

**உங்கள் சோதனைகள் எவ்வாறு உங்களை தேவனிடம் நெருங்கிச் சேரச் செய்யமுடியும்? நீங்கள் கவனமாக இல்லாவிட்டால், அவை எவ்வாறு அவரிடமிருந்து உங்களைத் தள்ளிவிட முடியும்?**

# எங்களைத் தேற்றியருளும்

**வாசிக்கவும் சங்கீதம் 60:1-5. இந்தச் சங்கீதம் எந்தச் சூழ்நிலைக்கு ஏற்றதாக இருக்கும்? வாழ்க்கையின் மகிழ்ச்சியான காலக்கட்டங்களிலும் புலம்பலின் சங்கீதங்களிலிருந்து நாம் எவ்வாறு பயனடையலாம்?**

சரீர, மன, ஆவிக்குரிய ரீதியாக சோதனையான காலக்கட்டங்களைச் சந்திக்கும்போது, ஜெபிப்பதற்கான சங்கீதங்களாக புலம்பலின் சங்கீதங்கள் உள்ளன. சில சமயங்களில் சங்கீதங்களின் வார்த்தைகளுக்கும் விசுவாசியின் அனுபவத்திற்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கலாம். இக்கட்டு இல்லாத தருணங்களில், புலம்பலின் சங்கீதங்கள் விசுவாசிகளுக்கு பயனுள்ளவைகளாக இருக்கின்றன.

முதலாவது, உபத்திரவம் மனித அனுபவத்தின் ஒரு பகுதி என்பதையும், அது நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் நேரிடுகிறது என்பதையும் உணரச்செய்கிறது. எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருப்பதையும், இக்கட்டு நேரத்தில் பெலத்தையும் தீர்வுகளையும் அளிப்பதையும் உறுதியளிக்கிறது. இந்தச் சங்கீதத்திலும், இக்கட்டின் மத்தியிலும் ('பூமியை அதிரப்பண்ணி' சங் 60:2), சங்கீதக்காரன் தேவனுடைய விடுதலை மீது தம் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்.

இரண்டாவது, புலம்பலின் சங்கீதங்கள் உபத்திரவத்தை அனுபவிப்பவர்கள்மீது மனதுருக்கம் கொள்ள கற்றுக்கொடுக்கின்றன. பொது ஆராதனையில், தேவனிடம் நம் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவிக்கும் போது, உபத்திரவத்தில் இருப்போரை மனதில் வைத்து நடக்கவேண்டும். ஒருவேளை நமக்கு பல நன்மைகள் நடந்திருக்கலாம், ஆனால் கடும் உபத்திரவத்தில் உள்ளவர்கள் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்கள் அல்லவா? கடினமான காலக்கட்டங்களை எதிர்கொண்டிருப்பவர்களை நாம் மறக்காமல் இருப்பதற்கு இதுபோன்ற சங்கீதங்கள் உதவுகின்றன. சங்கீதங்கள் நமக்குள்ளாக மனதுருக்கத்தையும், உபத்திரவத்தில் இருப்போருக்கு இயேசுவைப் போல ஊழியம் செய்வதற்கான விருப்பத்தையும் நமக்குள் உருவாக்கவேண்டும்.

'இந்த உலகம் ஒரு மிகப்பெரிய லாசருவின் வீடாக இருக்கலாம்; ஆனால் வியாதியஸ்தர்களைக் குணமாக்கவும், சாத்தானிடம் அகப்பட்டவர்களை விடுவிக்கவும் கிறிஸ்து வந்தார். ஆரோக்கியமும் பெலமும் அவருக்குள் இருந்தன. வியாதியஸ்தருக்கும், பாடுபட்டோருக்கும், பிசாசுகளால் பீடிக்கப்பட்டோருக்கும் தம் ஜீவனைக் கொடுத்தார். தம் குணமாகுதலின் பெறும்படி வந்த எவரையும் அவர் திருப்பியனுப்பவில்லை. தம்மிடம் வேண்டிக்கொண்டவர்கள் வியாதியோடு வந்திருந்ததை அறிந்திருந்தார்; ஆனாலும் அவர்களைக் குணப்படுத்த அவர் மறுக்கவில்லை. அந்த வறிய ஆத்துமாக்களுக்குள் கிறிஸ்துவின் பெலன் நுழைந்ததும், தங்கள் பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டார்கள்; அநேகர் தங்கள் ஆவிக்குரிய வியாதிகளிலிருந்தும் சரீரப்பிரகாரமான நோய்களிலிருந்தும் விடுதலையடைந்தார்கள். சுவிசேஷம் இன்றும் அதே வல்லமையைப் பெற்றிருக்கிறது; இன்றும் நாம் அதே விளைவுகளை ஏன் காணமுடியாது?'

---

**உங்கள் ஜெபங்கள் மட்டுமல்ல, உங்களுடைய ஊழியமும் இன்று தேவைப்படுகிற யாரை உங்களுக்குத் தெரியும்?**

# மேலும் படிக்க:

**வாசிக்கவும்: சங்கீதம் 42:8 மற்றும் எலன் ஒய்டின் ‘கல்வி’, பக்கம் 159–168. ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்ட இந்த வசனங்களின்படி ஜெபத்திற்கும் பாடலுக்கும் உள்ள தொடர்பு என்ன?**

தாவீதின் மனவருத்த சங்கீதத்தை (சங்கீதம் 51) பாவத்திற்கு மெய்யாக வருந்துகிற தன்மையை வெளிப்படுத்துகிற அவரது ஆத்துமாவின் மொழி, ஜெபம் என்று எலன் ஒய்ட் விவரிக்கிறார். பார்க்கவும்1. தங்கள் வாழ்க்கையில் தேவ பிரசன்னத்தை உணரும்படி சங்கீதங்களை விசுவாசிகள் மனனம் செய்ய ஊக்குவிக்கிறார்; இயேசுவும் தம்மை சோதனை நெருக்கி, பயம் ஒடுக்கியபோது சங்கீதங்களைச் சொல்லுகிற பழக்கமுடையவராக இருந்தாரென வலியுறுத்துகிறார். மேலும் ‘பரிசுத்த பாடலின் வார்த்தைகளால் பாவத்திற்கான மனவருத்தம் மற்றும் விசுவாசத்தின் ஊற்றுகளும், நம்பிக்கை, அன்பு, சந்தோஷம் ஆகியவற்றின் ஊற்றுகளும் எவ்வளவாய் கட்டவிழ்த்துவிடப் படுகின்றன! ‘பாடல்கள் பல மெய்யாகவே ஜெபமாக உள்ளன’ என்று குறிப்பிடுகிறார்.

நாம் சங்கீதங்களைச் சொல்லி ஜெபித்து, பாடும்போது, சங்கீதக்காரர்களின் விடாமுயற்சி, தைரியம், துணிவு, நம்பிக்கை ஆகியவற்றைப் பெறுகிறோம். அவை நம் ஆவிக்குரிய பயணத்தை நாம் தொடர ஊக்குவிக்கின்றன; அந்தப் போராட்டத்தில் நாம் தனியாக இல்லை என்று தேற்றுகின்றன. நம்மைப்போன்று அந்தகாரமான நாட்களைக் கடந்துசென்ற பலர், தேவ கிருபையால் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதேநேரம், கிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்ய எப்போதும் உயிரோடு இருக்கிறவர் என்பதால் (எபி 7:2); அவர் எப்போதும் நமக்காக ஊக்கத்தோடு வேண்டிக் கொண்டிருப்பதையும் சங்கீதம் நமக்கு வெளிப்படுத்துகிறது.

ஜெபம் மற்றும் தொழுகையில் சங்கீதங்களைப் பயன்படுத்துவது மனித அனுபவத்தின் எல்லா அம்சங்களையும் விசுவாசிகள் உணர்ந்துகொள்ள உதவுகிறது; அந்த அனுபவத்தின் பல்வேறு அம்சங்களை தொழுகைக்குள் கொண்டுவர கற்றுக்கொடுக்கிறது. சங்கீதங்கள் தெய்வீக–மனித ஜெபங்கள், பாடல்கள். அதனால்தான், தொழுகையில் சங்கீதங்களைப் பயன்படுத்துவது தேவசித்தத்திற்கும் அவருடைய குணமாக்குகிற வல்லமைக்கும் விசுவாசிகள் முக்கியம் இடமளிக்க உதவுகிறது.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *கற்றுக்கொள்ளாத, தானாக வருகிற ஜெபம்மட்டுமே ஜெபிப்பதற்கான வழியல்ல என்பதற்கான காரணம் என்ன? வேதாகம ஜெபங்களான சங்கீதங்களின் மூலம் நம் ஜெப வாழ்க்கை எவ்வாறு வளமடைய முடியும்?*
2. *சபையின் ஜெப அனுபவத்தை சங்கீதங்கள் எவ்வாறு வளப்படுத்துகின்றன? உங்கள் ஸ்தலத் திருச்சபையானது ஆலய ஆராதனைகளில் சங்கீதங்களைப் பயன்படுத்துவதற்கான நடைமுறை ரீதியிலான சில வழிகளை யோசியுங்கள்.*
3. *மனிதர்களின் விசுவாசப் பயணத்திலுள்ள சிக்கல்கள்பற்றியும், தேவனுடைய குணமாக்கும் கிருபைபற்றியும் சங்கீதங்கள் என்ன வெளிப்படுத்துகின்றன?*

# ராடோஸ்டினின் இதயக் கதறல்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னி மூலம்**

ராடோஸ்டினுக்கு தன் வாழ்க்கை வெறுப்பாக இருந்தது. அவரது நண்பர்கள் சரியில்லை. போதைப்பழக்கம் இருந்தது; சிறு குற்றங்களில் ஈடுபட்டார். 'நான் மாற வேண்டும், மாற வேண்டும்' என்பதே அவரது இதயத்தின் கதறலாக இருந்தது.

ராடோஸ்டினுக்கு திருமணமானது; இரண்டு மகன்களைப் பெற்றார். கஷ்டத்தைப் போக்க, வேலைதேடி தனது தாயகமான பல்கேரியாவை விட்டு வெளியேறினார். மேற்கு ஐரோப்பாவில் வேலைசெய்த போது, புதிதாக நண்பர்கள் கிடைத்தார்கள். சத்தியத்தை அறிய ஏங்கினார். பிறகு, மீண்டும் நல்ல வேலையைத் தேடி அலைந்தார். ஆனால் ஆறு வாரங் களில், நிலைமை அதிக மோசமாகியது. அவர் ஒரு சிறிய, வாடகை அறையில் பணம், உணவு இன்றி வாழவேண்டியதாயிற்று. அதிகமாகப்பசித்தது. விரக்தியில், தேவனிடம் கதறினார்.

'கடவுளே, யாரையாவது அனுப்பி உதவும்' என்று முதல் முறையாக ஜெபித்தார். காலை யில், கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. கையில் வேதாகமத்துடன் ஒருவர் நின்றிருந்தார். தேவனே அந்த மனிதனை அனுப்பினதை ராடோஸ் டின் புரிந்துகொண்டார்.

பால் என்கிற அந்த நபர், ராடோஸ்டின் சாப்பிடுவதற்காக உணவு கொண்டு வந்தார். அவரை சபைக்கு அழைத்தார். ராடோஸ்டின் சென்றார்; தேவ அன்பை உணரக்கூடிய தொழுகை இடங்களுக்கு அவர் சென்றதில்லை. அவரது இதயம் தொடப்பட் டது; அழுதார்.

பல்கேரியாவுக்குத் திரும்பிய பிறகு, தான் தேவனைச் சந்தித்தது பற்றியும், பாலின் சபையில் அவருடைய அன்பை அனுபவித்தது பற்றியும் தனது குடும்பத்தினரிடம் திரும்பத் திரும்பக் கூறினார். 'தேவனே, உமக்குச் சித்தம் இருந்தால், நீர் கடவுளாக இருந்தால், எனக்கு உதவும். பாலுடைய சபைதான் உம்முடைய சபை என்றால், என்னையும் என் குடும்பத்தையும் அங்கே அனுப்பும். என் வாழ்க் கையில் ஒரு முழுமையான மாற்றத்தைப் பெற விரும்புகிறேன்' என்று ஜெபித்தார்.

ஒருநாள், ராடோஸ்டினின் மனைவி திடீரென, "எனக்கு பல்கேரியா பிடிக்கவில்லை. நான் பாலுடைய திருச்சபை இருக்கிற பட்டணத்திற்கு வருகிறேன்" என்று சொன்னார்.

அங்கிருந்து கிளம்பவேண்டும் என்பது தேவனுடைய சித்தம் என்பதை ராடோஸ்டின் புரிந்துகொண்டார். தன் மனைவி தேவனை அறிய விரும்புவதையும் உணர்ந்தார். குடும்பமாகக் கிளம்பினார்கள். இன்று, ராடோஸ்டின் செவந்த்–டே அட்வெண்டிஸ்ட் சபையில் தீவிர உறுப்பினராக உள்ளார்; ஒவ்வொரு ஓய்வுநாளிலும் பாலுடைய சபைக்குச் செல்கிறார்.

கஷ்டம் இருந்தாலும்கூட, இப்போதெல்லாம் அவர் கவலைப்படுவதில்லை. "தேவன் எங்களுக்கு எல்லாவற்றையும் கொடுக்க நாங்கள் ஜெபிக்கவில்லை; ஆனால் எங்களை தீமையிலிருந்து பாதுகாக்க ஜெபிக்கிறோம். சோதனைகளின் ஊடே வாழ எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமெனக் கேட் கிறோம்" என்று அட்வெண்டிஸ்ட் மிஷனிடம் கூறினார்.

"வாலிப வயதில் நான் நல்' வாழ்க்கை வாழவில்லை; ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம், அவர் என் இருதயத்தை மாற்றியிருக்கிறார்" என்று கூறுகிறார்.